1970 ஆகஸ்ட் 26]

எல்லாம் பஸ்களுடைய கண்காணிப்பு சரியாக இல்லை என்பது தான் பொருள். டிரைவர்களாக அவர்கள் வருவதற்கு டெஸ்ட்கள் வைத்து அவர்கள் வேலைக்கு எடுக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: டிரைவர்கள் தகுதி, பயிற்சி எல்லாவற்றின் அடிப்படையில்தான் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

ஜெடர்பாளையத்தருகில் வாய்க்கால் வெட்டுதல்.

* 51 **வினு.—திரு. ஆர். கருப்பையா:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஜெடர்பாளையத்தருகில் வாய்க்கால் வெட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பெரம்பலூர், ஜெயங்கொண்டம், அரியலூர் வட்டங்களுக்கு பாசன வசதிச் செய்துக் கொடுக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம் பரிசீலிக்கப் பட்டு அதிக செலவு ஆவதாலும் பயன் மிகவும் குறைவாக இருப்ப தாலும் இத்திட்டம் கைவிடப்பட்டது.

திரு. ஆர். கருப்பையா: தலைவரவர்களே, இந்த ஜெடர்பாளையத் தருகில் வாய்க்கால் வெட்டினல் பெரம்பலூர், ஜயம்கொண்டம், அரியலூர் பகுதிகளுக்குப் பயன்படும். ஆகையால் அந்தப் பகுதி யில் அரசாங்கச் செலவில் சமுதாயக் கிணறுகள் வெட்டி பாசனம் செய்து தருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தக் கேள்வியை விவசாயத்துறை அமைச்சரைக் கேட்கவும்.

பொறியாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் வீட்டு வசதி.

* 52 **வினு—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித்துறையிலே பணியாற்றும் பொறியாளர் களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும், வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர். பொ. பொன்னம்பலம்: பேரவைத் தலைவரவர்களே, வட்ட அளவில் பணியாற்றும் பொறியாளர்களுக்கும், மேற்பார்வை யாளர்களுக்கும், கிராமப்புறங்களில் வீட்டு வசதி கிடைக்காத

காரணத்தால், நகர்ப்புறத்தில் தங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வட்ட அளவிலேனும் அவர்களுக்கு காவல் துறை, வருவாய் துறை அதிகாரிகளுக்கு இருப்பதைப்போல் வீடு கட்டிக் கொடுக்க அரசு திட்டம் வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறது. 1968-ம் ஆண்டில் 8 சூப்பரின்டென்டிங் இன்ஜினீயருக்கும், 25 எக்ஸிகியுடிவ் என்ஜினீயருக்கும் ரூ. 16.44 லட்சம் செலவில் வீடுகள் கட்டித் தருவதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறது. நிதி நிலைமை காரணமாக உடனடியாக இதை செயல்படுத்த முடியவில்லை. இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

Underground passage at Railway Level crossing near Pachakuppam.

* 53 Q.—THIRU K. S. KOTHANDARAMAIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is a proposal before Government to construct an underground passage for vehicular traffic at the Railway level crossing near Pachakuppam Railway Station (near Ambur); and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) தேசிய நெடுஞ்சாலை எண் 46 மைல் 113/18 அருகில் ராணிபேட்டை கிருஷ்ணகிரி சாலையில் பச்சகுப்பம் ரயில் நிலையத்துக்கு அருகில் இருப்புப்பாதை சாலைக்கடவுக்கு பதிலாக மேம்பாலம் சுரங்கப்பாதை கட்டுவதற்காக நான்காம் ஐந்தாண்டு திட்டத்தில் தேசிய நெடுஞ்சாலையின் கீழ் ரூ. 12 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. இதைவிட பல முக்கிய இருப்புப்பாதை சாலை கடவுகள் இருப்பதால் இத்திட்டத்தில் இவ்வேலைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Railway level crossing near Pachakuppam Railway Station is in a very strategic position and has become a conspiciously dangerous bottleneck on account of the heavy vehicular traffic there. I think almost all the Hon. Members of this House and all the Hon. Ministers have visited this place and realised the importance of an underground passage. The sooner the Government take up this work the better it is for the vehicular traffic.

THE HON. Thiru S. J. SADIQ PASHA : There is a proposal to put up an overbridge at M.113/8 in National Highway 46 near Pachakuppam station at a cost of Rs. 12 lakhs but it was given the lowest priority.